திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி திருமுல்லைவாயில் சத்தியமூர்த்தி நகரில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ஆவடி சட்டமன்ற மேம்பாட்டு நிதியிலிருந்து 51.50 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு கூடுதல் வகுப்பறை கட்டிடம் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளி கல்வி திட்டத்தின் கீழ் பள்ளி மேலாண்மை குழு கட்டிடத்தை தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்தார். உடன் ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார் மாநகராட்சி ஆணையர் கந்தசாமி தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் எஸ்.ஜெயபாலன் ஆவடி மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ் மண்டல குழு தலைவர் அமுதா பேபிசேகர், பகுதி கழகச் செயலாளர்கள் பேபி சேகர் ஜி.ராஜேந்திரன், ஜி.நாராயண பிரசாத், மாமன்ற உறுப்பினர் ஜெயப்பிரியா சரவணன், வட்டச் செயலாளர் வி.ராஜ் பள்ளி தலைமை ஆசிரியர் கலியபெருமாள் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் அரசு ஊழியர்கள் அதிகாரிகள் பலர் உள்ளனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் ஆர்.கே.பேட்டை மேற்கு ஒன்றியம் அம்மையார் குப்பம் பகுதியில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் ஒன்றிய பாஜக அரசின் இந்தி திணிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்களிடம் துண்டு பிரச்சாரம் வழங்கி கழக நிர்வாகிகளுடன் பேரணியாகச் சென்று ஒன்றிய பாஜக அரசை கண்டித்து கோஷமிட்டினர். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் சி.என்.சண்முகம் ,பெ.பழனி நிர்வாகிகள் பா.சம்பத் செங்குட்டுவன், பி.கே. சீனிவாசன், ஏ.கே. மணி, பி.கே. கோவிந்தசாமி, திருநாவுக்கரசு, ராமசாமி , சரவணன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் (எம்.ஆர்.பி.) தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட

2642 மருத்துவர்களுக்கு பணி நியமன ஆணைகள்! முதல்வர் 26 ஆம் தேதி வழங்குகிறார்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை, பிப். 22-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் நேற்று (20.02.2025) சென்னை, தேனாம்பேட்டை, டிஎம்எஸ் வளாகத்தில், 1127 மருத்துவர்களுக்கு கலந்தாய்வு நடத்தி பணியிட மாறுதல் ஆணையினை வழங்கினார்கள். பின்னர் அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு, தொடர்ச்சியாக பணி நியமனங்களாக இருந்தாலும், பணி மாறுதல்களாக இருந்தாலும் அல்லது பதவி உயர்வுகளாக இருந்தாலும் வெளிப்படைத்தன்மையோடு, ஒளிவு மறைவற்ற வகையில் கடந்த 4 ஆண்டுகளாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை பத்திரிகை மற்றும் ஊடகவியலாளர்களுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்தமாக இந்த துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிற அனைவருமே நன்கு அறிவார்கள். அந்த வகையில் தொடர்ச்சியாக இந்த பணி நியமனங்களும், பணிமாறுதல்களும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் (MRB) மூலம் 1,021 மருத்துவர் பணியிடங்களுக்கு தேர்வு நடத்தப்பட்டு பணி ஆணைகள் வழங்குவதென்று முடிவெடுக்கப்பட்டது. தமிழ்நாட்டில் இருக்கின்ற சுகாதார மாவட்டங்கள் 20 இல் அதிக காலிப்பணியிடங்கள் இருக்கிறது என்பதை கண்டறிந்து, அந்த 20 மாவட்டங்களுக்கு இந்த 1,021 மருத்துவர்கள் நியமிக்க வேண்டும் என்ற நிலைக்கு அன்றைய சூழ்நிலை நிலவியது.

மருத்துவர்களுக்கு கவுன்சிலிங்!

அந்த வகையில் மருத்துவர்களுக்கு இந்தியாவில் முதன் முறையாக தேர்வு

செய்யப்படும் மருத்துவர்களுக்கு கவுன்சிலிங் என்பது கடந்த 4 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மட்டுமே சாத்தியமாகிக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் முதன்முதலில் பணியில் சேர்வோருக்கு கலந்தாய்வு நடத்தப்பட்டு, ஏற்கனவே 1,021 மருத்துவர்களுக்கும், 900க்கும் மேற்பட்ட மருந்தாளுநர்களுக்கும், 1000 செவிலியர்களுக்கும் கலந்தாய்வு மூலம் பணி ஆணைகள் தரப்பட்டது. அந்த வகையில் மருத்துவர்கள் ஆகிய இந்த 1,021 பேருக்கு பணி ஆணைகள் தரப்பட்ட போது சொந்த ஊர்களுக்கு கிடைக்கின்ற அந்த வாய்ப்பு என்பது சற்று குறைவு. காரணம் காலிப்பணியிடங்கள் அதிகமாக இருக்கிற 20 மாவட்டங்களில் பணியாற்றுவதற்கு வாய்ப்பு தரப்பட்டதால் கொஞ்சம் அதில் நிறை, குறைகள் காணப்பட்டது. அந்தவகையில் அப்போது அனைத்து மருத்துவர்களிடத்திலும் சொன்னது ஓராண்டு காலம் நீங்கள் கிடைத்திருக்கிற வாய்ப்பை எந்தெந்த மருத்துவமனையில் விரும்பி எடுத்தீர்களோ, அங்கே பணியாற்றிக் கொண்டிருங்கள். ஓராண்டு கழித்து உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப கலந்தாய்வு நடத்தி பணிமாறுதல் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அந்த வகையில் மிகப்பொருமையாக, மிக சிறப்பாக இந்த 1,021 மருத்துவர்களும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றினார்கள். ஓராண்டு நிறைவுபெற்றிருக்கிற காரணத்தினாலும், புதிய மருத்துவ பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கிற காரணத்தினாலும் இன்றைக்கு கடந்த 3 நாட்களாக கலந்தாய்வு நடத்தப்பட்டு 1,127 மருத்துவர்களுக்கு கலந்தாய்வு மூலம் பணி ஆணைகள் தரப்பட்டுள்ளது. இந்த 1,127 பேரில் 893 மருத்துவர்களுக்கு அவரவர் விரும்பி கேட்ட இடங்களுக்கே கிடைத்திருக்கிறது. இப்போது மேடைக்கு வந்த 10க்கும் மேற்பட்ட மருத்துவர்களிடத்தில் நானும் நம்முடைய துறையின் செயலாளரும் நீங்கள் எந்த ஊர், எந்த ஊருக்கு கிடைத்திருக்கிறது என கேட்டபோது எல்லோருமே சொந்த ஊருக்கே கிடைத்திருக்கிறது என்று மகிழ்ச்சியோடு சொன்னதை இங்கே நினைவு கூறுகிறோம், குறிப்பாக ஒரு மருத்துவர் நான் சேலம் ஆத்தூரை சேர்ந்தவர், ஆனால் நான் வேலை செய்து கொண்டிருந்த இடம் கொடைக்கானல். இப்போது கொடைக்கானலில் இருந்து ஆத்தூருக்கே வந்துவிட்டேன் என்று சொந்த ஊருக்கே வந்த மகிழ்ச்சியை இங்கே எங்களோடு பகிர்ந்து கொண்டார். இப்படி எல்லா மருத்துவர்களுக்கும் 893 பேருக்கும் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது இந்த துறையில் மிகப்பெரிய மகிழ்ச்சிக்குரிய ஒன்று. அந்த வகையில் இன்றைக்கு இந்த 1,127 பேருக்கு கலந்தாய்வு நடத்தப்பட்டு வெளிப்படைத்தன்மையோடு ஒளிவு மறைவற்ற முறையில் பணி ஆணைகள் தரப்பட்டிருக்கிறது.

இந்த அரசுப் பொறுப்பேற்றபிறகு, முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இதுவரை 12,290 மருத்துவர்களுக்கு கலந்தாய்வு நடத்தி பணி ஆணைகள் பெற்றிருக்கிறார்கள். செவிலியர்கள் 6,818 பேர், மருந்தாளுநர்கள் 1302 பேர், மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்கள் 18,953 பேர் மற்றும் இன்று பணி ஆணைகள் பெற்றவர்கள் என ஆக மொத்தம் 40,490 பேருக்கு 4 ஆண்டுகளில் கலந்தாய்வு மூலம் பணி ஆணைகள் பெற்று மகத்தான சாதனை படைத்திருக்கிறார்கள். மருத்துவத்துறை வரலாற்றில் 40,000 பேர் கலந்தாய்வு மூலம் பணிமாறுதல்கள் பெற்றிருப்பது இந்தக் காலக்கட்டத்தில் மட்டும்தான் என்பது சிறப்புக்குரிய ஒன்று. அதோடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, புதிய பணிநியமனங்களைப் பொறுத்தவரை மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் (MRB) மூலமும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலமும், தேசிய நலவாழ்வு குழுமம் (NHM) மூலமாகவும், மாவட்ட சுகாதார நலவாழ்வு குழுமம் (District Health Society) மூலமாகவும் 23,598 மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள், மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்கள் என புதிதாக பணிஆணைகள் பெற்றிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் தற்போது புதிதாக 4615 பேருக்கு அதாவது மருந்தாளுநர்கள், கிராம சுகாதார செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள் என 4615 பேர் மிக விரைவில் பணியில் அமர்த்தப்படவிருக்கிறார்கள்.

மகிழ்ச்சியான ஒரு செய்தி, நீண்டகாலமாக காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு இத்துறை மேற்கொண்ட நடவடிக்கைகளின் வெற்றியாக கடந்த 05.01.2025 அன்று 2553 மருத்துவர்களுக்கு மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு நடைபெற்றது. இத்தேர்வில் சுமார் 24000 மருத்துவர்கள் கலந்து கொண்டார்கள். இதில் 4585 பேருக்கு சான்றிதழ் சரிபார்ப்புக்காக அழைக்கப்பட்டனர். அதன்பிறகு கூடுதலாக ஏற்பட்ட காலிப்பணியிடங்கள் 89 சேர்த்து 2642 மருத்துவர் பணியிடங்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இதில் தேர்வாகும் மருத்துவர்களுக்கு விரைவில் கலந்தாய்வு நடத்தப்பட உள்ளது.

பணி நியமன ஆணை!

26.02.2025 அன்று காலை 10.30 மணிக்கு சென்னை, திருவான்மியூரில் உள்ள இராமச்சந்திரா கன்வன்சன் சென்டரில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2642 மருத்துவர்களுக்கு பணிநியமன ஆணை தரும் விழா மிகச் சிறப்பாக நடைபெறவிருக்கிறது. இந்த நிகழ்ச்சியின் மூலம் ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள் காலிப்பணியிடங்கள் இல்லை என்கின்ற சூழல் உருவாகியிருக்கிறது. முதுநிலை பட்டப்படிப்பு பயின்ற மருத்துவர்களுக்கு DMS, DME போன்ற துறைகளுக்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கிறது. இன்றைய நிகழ்ச்சி ஒரே நாளில் 1127 மருத்துவர்களுக்கு கலந்தாய்வு நடத்தி அவரவர் விரும்பும் இடங்களுக்கு பணி ஆணைகள் தரப்பட்டிருக்கின்ற நிகழ்வு, சாதனை நிகழ்வு ஆகும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர்.ப.செந்தில்குமார், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.ராஜமூர்த்தி, கூடுதல் இயக்குநர் மரு.விஜயலட்சுமி, இணை இயக்குநர் மரு.செந்தில்குமார் மற்றும் மருத்துவர்கள், அரசு உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் அடுத்த வல்லூரில் உள்ள கிழக்கு மாவட்ட அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆதிதிராவிடர் நலகுழு அணி மற்றும் மாவட்ட வர்த்தக அணி சார்பில் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அமைப்பாளர்கள் சம்பத் , ப.தனசேகரன் தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடுவது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். உடன் மாநில மாவட்ட நிர்வாகிகள் மு.பகலவன் வெ.அன்புவாணன், பா.செ.குணசேகரன், மு.முரளி, நிலவழகன், நா.மோகன்ராஜ், பா.து. தமிழரசன், திருமலை, தேசராணி தேசப்பன், முகமது அலவி, சேதுராமன், ஜானகிராமன், ஆர்.சுரேஷ்பாபு, தன்ராஜ், வி.கே.வி.குமார், சதீஷ்குமார், முத்துசாமி, அருள்,மீ.மு. ராமகிருஷ்ணன், முருகானந்தம், கோதண்டம் ,பழனி, முனிநாதன், மனோஜ் குமார் ,பிரபாகரன் ,இயேசு ராஜன், சந்துரு, கோபால், உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டர்கள்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி

திருமுல்லைவாயில் அரசுப் பள்ளியில் 51 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் வகுப்பறை கட்டிடங்கள்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்தார்!

திருவள்ளூர் பிப்.22-

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதியில் ரூ. 51.50 லட்சத்தில் அரசுப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைக் கட்டடம், வட்டார வளமையத்தின் அலுவலகம் ஆகியவற்றை சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் ஆவஇ சா.மு.நாசர் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார் திறந்து வைத்தார்.

ஆவடிசட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 30 லட்சம் மதிப்பீட்டில் ஆவடி சத்தியமூர்த்தி நகர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 2 கூடுதல் வகுப்பறைக் கட்டடம் அண்மையில் கட்டி முடிக்கப்பட்டது.

இந்த நிலையில், புதிய வகுப்பறை கட்டடங்களை தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் சா.மு.நாசர் திறந்து வைத்தார். தொடர்ந்து அவர் பள்ளி வளாகத்தில் ரூ. 21.50 லட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டவட்டார வளமையத்தின் அலுவலகக் கட்டடத்தையும் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில், ஆவடி மேயர் கு.உதயகுமார், ஆணையர் எஸ். கந்தசாமி, மாநகரப் பொறியாளர் பி.வி.ரவிச்சந்திரன், மண்டல குழுத் தலைவர்கள் அமுதா சேகர், ஜி.ராஜேந்திரன், திமுக நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், எஸ். ஜெயபாலன், சண்.பிரகாஷ், பேபி சேகர், ஜி. நாராயணபிரசாத், கா.மு. ஜான், முல்லைராஜ், எல். சரவணன், பாண்டியன், டிசோசா, நாகராஜ், மாநகராட்சி உறுப்பினர்கள் ஜெயப்பிரியா சரவணன், மாலா பிரகாஷ், எஸ்.செல்வம், து.சக்திவேல்,ம. விமல், யு.வெங்கடேசன், தலைமை ஆசிரியர் கலியபெருமாள், மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

வேளச்சேரி மேற்குப் பகுதி செயற்குழுக் கூட்டம்!

பகுதி செயலாளர் அரிமா சு.சேகர் அறிவிப்பு!

சென்னை, பிப். 22-

வேளச்சேரி மேற்கு பகுதி செயலாளர் அரிமா சு.சேகர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

வேளச்சேரி மேற்கு பகுதி கழக செயற்குழு கூட்டம் இன்று (22.2.2025 சனிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு வேளச்சேரி பிரதான சாலை, எண்.61எஃப்ல் உள்ள பகுதி கழக அலுவலகமான பொ.தனசேகரன் மாளிகையில் பகுதி கழக அவைத்தலைவர் சி.பழனி தலைமையில் நடைபெறுகிறது.

நடைபெறும் செயற்குழு கூட்டத்திற்கு வேளச்சேரி மேற்கு பகுதிக்கு உட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

பொருள்: கழக தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழா, கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சேப்பாக்கம் பகுதி 114 (அ) வட்டச் செயற்குழுக் கூட்டம்!

வட்டச் செயலாளர் அ.தமிம் அன்சாரி அறிக்கை!

சென்னை, பிப்.22

சேப்பாக்கம் பகுதி 114 (அ) வட்டக் கழக செயற்குழுக் கூட்டம் இன்று நடைபெறுகின்றது என்று வட்டச் செயலாளர் அ.தமிம் அன்சாரி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சேப்பாக்கம் பகுதி, 114 (அ) வட்டக் கழகம் சார்பில் வட்டக் கழக நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் இன்று (22.2.2025- சனிக்கிழமை) காலை 10 மணிக்கு சேப்பாக்கம் அருணாச்சல தெருவில் அமைந்துள்ள அலுவலகத்தில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு வட்ட அவைத் தலைவர் பி.எஸ். மணி தலைமை வகிக்கிறார்.

அதுபோது கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படவிருப்பதால் நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் அ.தமிம் அன்சாரி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நே.சிற்றரசு தலைமை நா.சந்திரபாபு முன்னிலையில்

சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணி நிர்வாகிகள் கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் மு.சீனிவாசன் அறிக்கை!

சென்னை, பிப். 22-

சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று 22.02.2025, சனிக்கிழமை மாலை 6.30, மணியளவில், நுங்கம் பாக்கம், ஸ்டெர்லிங் சாலை சந்திப்பில் உள்ள, சங்கீதா உணவகத்தின் மாடியில் உள்ள ஹாலில் நடைபெறுகிறது இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர், நே. சிற்றரசு தலைமையேற்று ஆலோசனை வழங்குகிறார்.

மாநில இலக்கிய அணியின் பொருளாளர், டாக்டர். நா.சந்திரபாபு, கூட்டத்திற்க்கு முன்னிலை வகிக்கிறார்.

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், அவர்களின் பிறந்தநாள் விழாவை மிக சீறும்சிறப்புமாக நடத்துவது பற்றி, சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணியின் நிர்வாகி களின் கருத்தறிய உள்ளதால், இலக்கிய அணி நிர்வாகிகள் அணைவரும் தவராமல் கலந்துக்கொன்டு கூட்டத்தை சிறப்பிக்கு மாறு மு.சீனிவாசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

தியாகராயர் நகர் மேற்குப் பகுதி இளைஞரணி ஆலோசனைக் கூட்டம்!

அமைப்பாளர் ஆ.மணிரத்தினம் அறிக்கை!

சென்னை, பிப்.22-

சென்னை தென் மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் மேற்கு பகுதி இளைஞர் அணி சார்பில் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து பகுதி அமைப்பாளர் ஆ.மணிரத்தினம் அறிக்கை வருமாறு:

சென்னை தென் மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் மேற்கு பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (22.02.2025 சனிக்கிழமை) மாலை 6:00 மணி அளவில் தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி தலைமையில் தியாகராயர் நகர் மேற்கு பகுதி கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி. மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ்.உமாசங்கர், எ.அஸ்வின்குமார், டேண்டி பிரகாஷ், முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தின் மேற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்கு மாறு கேட்டு கொள்கிறேன்.

பொருள்: கழகத் தலைவர்தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் கழக ஆக்கப் பணி.

இவ்வாறு ஆ.மணிரத்தினம் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் நகராட்சிக்கு உட்பட்ட 12 வது வார்டு பத்தியல்பேட்டை பகுதியில் ரூ.45 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது இப்பணிகளை மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் ஆகியோர் ஆலோசனைபடி திருவள்ளூர் நகர மன்ற தலைவர் உதயமலர்பாண்டியன் நேரில் ஆய்வு மேற்கொண்டு சாலைகளை பார்வையிட்டார். அருகில் முன்னாள் நகர் மன்ற தலைவர் பொன் பாண்டியன், 12வது வார்டு திமுக நகர் மன்ற உறுப்பினர் ஜி.ஆர்.ராஜ்குமார் தாமஸ் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.